# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

## நாட்டுநலப்பணித்திட்டம் அணி எண் - 187

### காயல்பட்டணம்

## *ஆண்டு அறிக்கை (2013 – 2014)*

## நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித் திட்டம் **"நான் அல்ல, நாம்"** என்பதை கோட்பாட்டாக கொண்டது. இது ஜனநாயக வாழ்க்கை முறையின் சாராம்சத்தை வெளிப்படுத்துவதோடு மட்டும் அல்லாமல் தன்னலமற்ற சேவையின் தேவையை வலியுறுத்துகிறது. இது ஒரு தனிப்பட்ட மனிதனின் நலன் முழு சமூகத்தின் பொதுநலத்தையே சார்ந்து இருப்பதை காட்டுகிறது.

நாட்டு நலப்பணித் திட்டத்தின் முக்கிய நோக்கம் சமூக சேவை மூலம் ஆளுமையை வளர்ப்பதே ஆகும்.இந்த திட்டம் மாணவர்களுக்கு சமூக நல எண்ணங்களை கற்பிக்கவும்,எந்தவித பாரபட்சமும் இல்லாமல் சமூகத்திற்கு சேவை செய்வதற்கும் அமைக்கப்பட்டது.உதவி தேவைப்படுபவர்களுக்கு தக்க நேரத்தில் உதவி புரிந்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி இச்சமூகத்தில் ஒரு கௌரவமான வாழ்க்கை வாழ இத்திட்டத்தில் பணிபுரியம் தொண்டர்கள் இரவு பகல் பாராமல் உழைக்கின்றனர்.இதன் மூலம் தொண்டர்கள் கிடைக்கக்கூடிய வளங்களை சிறப்பாக கையாண்டு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ கற்றுக்கொள்கின்றனர்.

<u>இத்திட்டத்தின்கீழ் எமது கல்லூரியில் நிகழ்ந்தவை</u> :

| தேதி | நிகழ்வுகள் |
|---|---|
| 04.07.13 | ஆர்.ஜே.பாரத் நிறுவனத்தை சேர்ந்த திரு.ரவி அவர்களால் நாட்டு நலப்பணித்திட்ட மாணவியருக்கு தீயினால் ஏற்படும் விளைவுகளையும் மற்றும் அதை தடுக்க மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. |
| 08.07.13 | தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் திருமதி S. மதுமதி I.A.S அவர்கள் தலைமையில் நாட்டு நலப்பணித்திட்டத்தின் துவக்கவிழா நடைபெற்றது. |

| | |
|---|---|
| | அத்துடன் நாட்டுநலப்பணித்திட்ட மாணவச் செயலாளராக கணிதவியல் இரண்டாமாண்டு மாணவி M.G. பானுமதியும் மாணவத்துணைச் செயலாளராக பொருளியல் முதலாமாண்டு மாணவி இந்துமதியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். |
| 22.07.13 | நாட்டுநலப்பணித் திட்டத்தின் சார்பாக நட்சத்திர பார்வையற்றோர் நலச்சங்கத்தினருக்கு 600 பால்பாயிண்ட் பேனா விற்றுக் கொடுக்கப்பட்டது. |
| 30.08.13 | திருநெல்வேலி ராணி அண்ணா மகளிர் கல்லூரியின் வேதியியல் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் C.V. மைதிலி, M.Sc., M.Ed., M.Phil., Ph.D., அவர்களால் மாணவியருக்கு "புத்தொளிவு பயிற்சி" வழங்கப்பட்டது. |
| 07.09.13 | உலக எழுத்தறிவு தினம் கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக திருச்செந்தூர் ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கு.கதிரேசன் M.A., M.Phil., Ph.D., அவர்கள் எழுத்தறிவு பற்றிய தகவல்களை மாணவியருக்கு எடுத்துரைத்தார்கள். |
| 20.09.13 | பாளையங்கோட்டை சென்ட் ஜான்ஸ் கல்லூரியின் பொருளியியல் துறை பேராசிரியர் E. கதிரவன் M.A., M.Ed., M.Phil., அவர்கள் போட்டித்தேர்வு பற்றியும் அதை மேற்கொள்வது பற்றியும் எடுத்துரைத்தார்கள். |
| 02.10.13 | நாட்டு நலப்பணித்திட்ட மாணவியர் சேர்ந்த 45 மாணவிகளும், திட்ட அலுவலர் திருமதி மு. சூரத்ஷீபா M.A., M.Phil மற்றும் பேராசிரியை செல்வி கோ. சுபா M.Sc., M.Phil., அவர்களும் அவர்களுடன் கல்லூரி முதல்வர் திருமதி வே.சசிகலா M.A., M.Phil., Ph.D., அவர்கள் தலைமையில் அடைக்கலாபுரத்தில் உள்ள அன்பு இல்லத்தை பார்வையிட சென்றார்கள். |
| 25.10.13 | நாட்டு நலப்பணித்திட்ட மாணவிகளுக்கு "காஹிரா இண்டேன் விநியோகிப்பாளர்" காயல்பட்டணம் சார்பில் மெகா சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்னும் தலைப்பில் தீ மற்றும் அதனால் ஏற்படும் விபத்துகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வது எப்படி? என்பது பற்றிய விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. |
| 09.12.13 | திட்ட அலுவலர் திருமதி மு. சூரத்ஷீபா M.A., M.Phil மற்றும் 5 பேராசிரியைகளும் 113 நாட்டு நலப்பணித்திட்ட மாணவிகளும், காயல்பட்டணத்தில் உள்ள துளிர் பள்ளிக்குச் சென்று அவர்களின் தாழ்வு |

| | |
|---|---|
| | மனப்பான்மையை போக்கும் விதமாக மனித சங்கலி ஊர்வலத்தில் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளின் தினத்தை கொண்டாடினார்கள். |
| 12.01.14 | நாட்டு நலப்பணித்திட்டமும், செஞ்சுருள் சங்கமும் இணைந்து தூத்துக்குடி அரசு மருத்துவமனை மருத்துவர்களின் உதவியுடன் பூச்சிக்காடு இந்து உயர்நிலைப் பள்ளியில் வைத்து இரத்ததான முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமை நாட்டுநலப்பணித்திட்ட அலுவலா் திருமதி மு. சூரத்ஷீபா மற்றும் பேராசிரியை செல்வி கோ.சுபா அவர்களும் மிகச்சிறப்பாக நடத்தினர். |
| 22.02.14 | கல்லூரி முதல்வர் முனைவர் வே. சசிகலா M.A., M.Phil., Ph.D., அவர்கள் தலைமையில் 52 மாணவிகளும் நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர், மற்றும் 1 பேராசிரியையும் ஆய்க்குடி “அமர்சேவா” சங்கத்தினை பார்வையிட சென்றார்கள். சங்கத்தின் நிறுவனர் திரு. ராமகிருஷ்ணனின் வார்த்தைகள் புதுவித தன்னம்பிக்கை உணர்வினை மாணவிகளிடையே ஏற்ப்படுத்தியது. |
| 26.02.14 | தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரியின் மருத்துவர் டாக்டர் D. அமுதன் அவர்களால் புற்றுநோய் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. அதில் நோய்க்கான அறிகுறிகள் மற்றும் தடுக்கத்தேவையான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டது. |

# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

## காயல்பட்டணம்

## நாட்டுநலப்பணித்திட்டம் அணி எண் - 187

***<u>சிறப்பு முகாம் - பூச்சிக்காடு (26.12.13 – 02.01.14)</u>***

26.12.2013 வியாழக்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் பூச்சிக்காடு அம்மன் கோவில் மைதானத்தில் கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யது அப்துர் ரஹ்மான், கல்லூரிச் செயலர் ஹாஜி வாவு M.M. மொஹீதஸீம் B.A., (CS), கல்லூரி துணைச்செயலர் ஹாஜி ஹாபிஸ் வாவு S. A. R. அஹமது இஸ்ஹாக் M.A., Azhari (Egypt) அவர்களின் தலைமையில் முகாமின் தொடக்க விழா ஆரம்பமானது. கல்லூரி முதல்வர் Dr. V. சசிகலா அவர்கள் தொடக்கவுரை வழங்க பூச்சிக்காடு இந்து உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு. ஆபேத்நேகோ அவர்கள் உதவித்தலைமையாசிரியர் திரு. ஞா. மாதவன் அவர்கள் பள்ளி ஆலோசகர் திரு. ஜெயஆதித்தன் அவர்கள் பூச்சிக்காடு ஊர்த்தலைவர் திரு. மாவீரன் K.V. பார்வதிமுத்து அவர்கள் ஊர் கூட்டுறவு சங்கத்தலைவர் திரு. P.K. பாலசுப்பிரமணியம் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

| தேதி | நிகழ்வுகள் |
|---|---|
| 27.12.13 | மாணவியர் சமூகப்பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டனர். |
| 28.12.13 | மாணவியர் களப்பணியில் ஈடுபட்டு கோவில் வளாகம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியினை சுத்தம் செய்தனர். மதியம் 2 மணியளவில் காயல்பட்டணம் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவி திருமதி. இ.ரா. அருணாஜோதி M.A.,M.Phil., அவர்களால் தனிமனித ஒழுக்கம் பற்றிய சிறப்புரை வழங்கப்பட்டது. இரவு பெண்கல்வியும் வேலைவாய்ப்பும் என்னும் தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. |
| 29.12.13 | கால்நடை மற்றும் கண் மருத்துவ முகாம் நடைபெற்றது. கண் மற்றும் கால்நடை முகாமினை வாசன் கண்மருத்துவ குழுவினர் மற்றும் காயாமொழி கால்நடை மருத்துவ குழுவினர் சிறப்பாக நடத்தினார்கள். மாணவியர்கள் இருகுழுவாக பிரிந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை |

| | |
|---|---|
| | செய்துகொடுத்தார்கள். இதில் 100 மேற்பட்ட மக்கள் கலந்துக் கொண்டு பயனடைந்தார்கள். மேலும் 150 மேற்பட்ட கால்நடைகளுக்கு சத்து ஊசி மற்றும் பூச்சிகொல்லிமருந்து வழங்கப்பட்டது. மாலைநேர பொதுகூட்டத்தில் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொதுமருத்துவமனை குழந்தைகள் மற்றும் குடல்நல மருத்துவர் பேராசிரியர் டாக்டர். ஞானி சேக் முஹம்மத் அவர்கள் குழந்தை பராமரிப்பும் ஆரோக்கியமும் என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார்.<br>“சட்டமும் மனித உரிமைகளும்” என்னும் தலைப்பில் திருநெல்வேலி நீதித்துறை நடுவர் திரு V. ராமலிங்கம் B.Sc., B.L அவர்கள், வழக்கறிஞர்கள் திரு. J.S.D. சாத்ராக் B.Sc., B.L அவர்கள், திரு. R. சரவணன் B.A., B.L அவர்கள், திரு. S. பிரகாசவினோத் B.Com., B.L அவர்கள், திரு. ஏ. நடேசஆதித்தன் B.A., B.L அவர்கள், மற்றும் திரு. A. சதீஷ் பாலன் M.A., B.L அவர்கள், மற்றும் ஆகியோர் கலந்து கொண்டு சட்டம் பற்றிய செய்திகளை மாணவிகளுக்கும், ஊர் பொதுமக்களுக்கும் எடுத்துரைத்தார்கள். அதனைத் தொடர்ந்து மாணவியரின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. |
| 30.12.13 | மாணவியர் உடல் உழைப்பில் ஈடுபட்டனர். மதியம் 2 மணியளவில் பூச்சிக்காடு இந்து உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியை திருமதி. சு.வி. சுதா M.A.,B.Ed., M.Phil., அவர்களால் மங்கையரின் உடல் நலமும் உள்நலமும் பற்றி சிறப்புரை வழங்கினார். மாலை சுற்றுச்சூழல் பாதுகாப்பு காடுகள் வளர்ப்புப் பற்றி பூச்சிக்காடு வனத்துறை (ஓய்வு) திரு. யு. சீனிவாசகம் அவர்களால் சிறப்புரை வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஊட்டச்சத்தும் உடல்நலமும் பற்றி பூச்சிக்காடு இந்து உயர்நிலைப்பள்ளி உதவிதலைமையாசிரியர் திரு. நா.மாதவன் அவர்களால் சிறப்புரை வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. |
| 31.12.13 | ஆரோக்கியத்தை வலியுறுத்தி மாணவியரின் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. மதியம் 2 மணியளவில் பூச்சிக்காடு பள்ளி ஆலோசகர் திரு.ஜெயஆதித்தன் அவர்கள் மாணவியருக்கு வினாடிவினா போட்டி நடத்தினார். மாணவியர்கள் ஊர்மக்களுக்கு விளையாட்டு போட்டியினை நடத்தினார்கள். மாலை 6 மணியளவில் பொதுக்கூட்டத்தில் இன்றைய வேளாண் சமூகம் என்ற தலைப்பில் பாளையங்கோட்டை தூயசவேரியார் கல்லூரி பொருளியல்துறை பேராசிரியர், திரு. அமலநாதன் அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து கல்லூரி மாணவிகளின் |

| | |
|---|---|
| | கலைநிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் திருச்செந்தூர் ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் திரு. கு. கதிரேசன் அவர்கள் தலைமையில் இன்றைய சமுதாயம் இலக்கு நோக்கு நகர்கிறது – நகரவில்லை என்னும் தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. மாணவிகளின் விவாதங்களுக்கு நல்லதொரு தீர்ப்பை வழங்கினார். |
| **01.01.14** | மாணவியர் கூட்டுறவுச் சங்கத்தைச் சுற்றியுள்ள பகுதியினை சுத்தம் செய்தனர். மதியம் மகளிர்கான கோலப்போட்டி சிறுவர்களுக்கான Slow Cycle Race போன்ற விளையாட்டுகள் நடத்தப்பட்டது. மாலை “சமூகம் சீரடைய பெரிதும் துணை நிற்பவர்கள் ஆண்களா! பெண்களா! என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. திரு. ரமேஷ் பாரத் அவர்கள் நடுவராக பொறுப்பேற்க கல்லூரி மாணவிகள் ஒரு அணியினராகவும் ஊர் மாணவர்கள் ஒரு அணியினராகவும் வாதிட்டார்கள். |

02.01.14 அன்று முகாமின் நிறைவு விழா பூச்சிக்காடு அம்மன்கோவில் மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. அதில் திட்ட அலுவலர் திருமதி. மு சூரத் ஷீபா M.A., M.Phil., அவர்கள் முகாம் அறிக்கை வாசித்தார்கள். அதனைத் தொடர்ந்து கல்லூரியின் செயலாளர் ஹாஜி W.M.M. மொகுதஸீம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து பூச்சிக்காடு இந்து உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு. J.S. ஆபேத்நேகோ B.Sc., M.Ed., அவர்கள், பள்ளி ஆலோசகர் திரு. ஆ. ஜெயஆதித்தன் அவர்கள், கல்லூரி முதல்வர் முனைவர் வே.சசிகலா M.A.,M.Phil., Ph.D அவர்கள், பூச்சிகாடை சேர்ந்த திரு. ரமேஷ்பாரத் அவர்கள் ஆகியோர் சிறப்புரை வழங்கினார்கள். கல்லூரியின் நிறுவனர் அல்ஹாஜ் வாவு S. செய்யிது அப்துர்ரஹ்மான் அவர்கள் விளையாட்டு போட்டியில் பரிசுபெற்ற அனைவருக்கும் பரிசு வழங்கினார். கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யது அப்துர் ரஹ்மான், கல்லூரிச் செயலர் ஹாஜி வாவு M.M. மொஹீதஸீம் B.A., (CS), கல்லூரி துணைச்செயலர் ஹாஜி ஹாபிஸ் வாவு S. A. R. அஹமது இஸ்ஹாக் M.A., Azhari (Egypt) ஆகியோர்களும் முகாமின் நிறைவு விழாவில் கலந்து கொண்டனர்.